பல மாநிலங்கள் தங்களுக்கு நிதி இடர்பாடு உள்ளது என்று தெரிவித்ததை கருத்தில் கொண்டு மாநில அரசுகள் ஏற்க வேண்டிய 50 சதவீதத் தொகையை 3 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் கடனாகக் கருதப்பட்டது. இத்திட்டத்தின் செலவு பொறுப்புகள் முழுவதையும் மைய அரசு ஏற்கவில்லை. தமிழ் நாட்டிலே கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து உழவர்கள் பெற்ற கடனைப் பொறுத்தவரையில் இத்திட்டத்திற்கு ஆகும் மொத்த செலவு 289 கோடியே 43 இலட்சம் ரூபாய் ஆகும். இத்தொகை யில் 61 கோடியே 67 இலட்சம் ரூபாயை கூட்டுறவு நிறுவனங் களுக்கு மத்திய அரசு இன்னும் கொடுக்க வேண்டியிருக்கிறது. நாபாடு மூலமாக கூட்டுறவு நிறுவனங்களுக்கு மத்திய அரசு இது வரையில் வழங்கிய 50 சதவீத தொகையை மாநில அரசு திருப்பிச் செலுத்தி வருகிறது.

முற்பகல் 11-30

(ஆ) சத்துணவுத் திட்ட பணியாளர்களுக்கு வார விடுமுறை அளிப்பது குறித்து சமூகநல அமைச்சரின் அறிக்கை:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன் கீழ் ஒரு முக்கிய அறிவிப்பினைப் பேரவைக்கு வெளியிட அனுமதி கோரி யிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் தமிழகத்தில் 1982ஆம் ஆண்டு முதல் சுமார் 68,000 மையங்களில் 75 இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் தினந்தோறும் பயன்பெறும் வகையில் செயல் படுத்தப்பட்டு வருகிறது. 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் பயன்பெறும் குழந்தைகள் நல மையங்களும், 5 முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகள் பயன்பெறும் பள்ளி மையங்களும் ஆண்டு முழுவதும் எல்லா நாட்களிலும் இயங்கி வருகின்றன. இந்த மையங்களில் பணி புரியும் பகுதி நேர பணி யாளர்களுக்கு வார விடுமுறை எதுவும் கிடையாது. இந்தப் பணி யாளர்களுக்கு வாரந்தோறும் சனி, ஞாயிறு விடுமுறை விட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வரு கிறது. சத்துணவு பணியாளர் சங்கங்களின் முக்கியமான கோரிக்கைகளில் இதுவும் ஒன்றாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த கோரிக் கையை தாய் உள்ளத்தோடு பரிவுடன் பரிசீலித்தார்கள். சத்துணவு பணியாளர்களுக்கு வார விடுமுறை விட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் குழந்தைகளுக்கு

தினந்தோறும் சத்துணவு வழங்குவது எக்காரணத்தைக் கொண்டும் நிறுத்தப்படக்கூடாது என்ற தனது விருப்பத்தையும் தெரிவித்தார்கள். அதற்குரிய மேலான யோசனையும், அறிவுரையும் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இதை அடுத்து சத்துணவு ஊழியர்களின் சங்கப் பிரதிநிதிகளுடன் எப்படி உணவு நிறுத்தப்படாமல் விடுமுறை வழங்குவது என்ற முதலமைச்சரின் அரிய ஆலோசனையை அவர்களுக்குத் தெரிவித்து ஆலோசனை செய்யப்பட்டது. இந்தப் பேச்சுவார்த்தையில் தமிழ்நாடு சத்துணவு பணியாளர் பேரவை, சத்துணவு அமைப்பாளர் நலச் சங்கம், பால சேவிகாக்கள் சங்கம் ஆகியவை கலந்து கொண்டன. அதன் அடிப்படையில் இந்தப் பிரச்சினை ஆய்வு செய்யப்பட்டு மாண்புமிகு முதலமைச்சரின் அரிய ஆலோசனை அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த பேச்சுவார்த்தையின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு சத்துணவு பணியாளர்களுக்கு சனி, ஞாயிறு விடுமுறை அளிப்பதென ஆணை பிறப்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். சத்துணவு மைய அமைப்பாளர்களுக்கு இனி எல்லா சனி, ஞாயிறு கிழமைகளிலும் விடுமுறை அளிக்கப்படும். ஆனால் அதே நேரத்தில் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்ற உணவு நிறுத்தப்படாமல் மையத்தில் உள்ள சமையலர், உதவியாளர் ஆகிய இருவரும் மாற்று அடிப்படையில் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் ஒருவர் வந்திருந்து உணவைச் சமைத்து வழங்குவார். அதாவது சனிக்கிழமை உணவைச் சமைத்து வழங்குகின்ற சமையலர் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை எடுத்துக் கொள்வார். ஞாயிற்றுக்கிழமை உணவைச் சமைத்து வழங்குகின்ற உதவியாளர் சனிக்கிழமை விடுமுறை எடுத்துக்கொள்வார். எனவே, அவர்களுக்கு வாரம் ஒரு நாள் விடுமுறை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி) தமிழகம் முழுவதும் உள்ள 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட சத்துணவு பணியாளர்களின் 10 ஆண்டுக்கால கோரிக்கை கேட்பாரற்றுக் கிடந்ததை இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 72 இலட்சம் குழந்தைகளுக்கு உணவும் நிறுத்தப்படாமல் நிறைவேற்றியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

9. அறிவிப்பு.

முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1992--93—

மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992-93 ஆம் ஆண்டின் கூடுதல் மானியங்களுக்கான